பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண்: 669 **நாள்: 11.11.2026**

மாநகராட்சி இணை ஆணையாளர் (பணிகள்) திரு.செ.சரவணன், இ.ஆ.ப., அவர்கள், அடையாறு மண்டலம், கிண்டி தொழிற்பேட்டை பகுதியில் நடைபாதை, சாலை, மழைநீர் வடிகால் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை மேம்படுத்துவது தொடர்பாக இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இன்று (11.11.2026) இணை ஆணையாளர் (பணிகள்) திரு.செ.சரவணன், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், வார்டு-168க்குட்பட்ட கிண்டி தொழிற்பேட்டை பகுதியில் நடைபாதை, சாலை, மழைநீர் வடிகால் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை மேம்படுத்துவது தொடர்பாக பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது, மேற்பார்வை பொறியாளர் (சிறப்புத் திட்டங்கள்) திரு.பி.விஜய் அரவிந்த், மண்டல அலுவலர் திரு.எஸ்.சாந்தமூர்த்தி மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/ மக்கள் தொடர்பு அலுவலர்,

பெருநகர சென்னை மாநகராட்சி.